# தென்னிந்தியத் தமிழ் தொலைக்காட்சித் தொடர் நாடகங்களால் முஸ்லிம் பெண்களிடையே ஏற்பட்டுள்ள எதிர்மறைத் தாக்கங்கள் : கல்முனைக்குடியை மையப்படுத்திய ஆய்வு

# A Negative Impacts of South Indian Tamil Tele Serials on Muslim Women: Special Reference to kalmunaikudy

**Ms. MI. Rinosa (1) and Mr. SMM. Mazahir (2)**

(1)Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka

(2) Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka

(rinosaismail@gmail.com, mazahirsmm@gmail.com)

**ஆய்வுச் சுருக்கம்**

*இன்று உலகில் மனிதனது வாழ்விலும் அவனது நடத்தையிலும் ஊடகங்களின் செல்வாக்கு மிக அதிகமானதாகக் காணப்படுகின்றது. தொடர்பூடக சாதனங்களில் ஒன்றான தொலைக்காட்சியும் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்று, ஒவ்வொரு வீட்டிலும் இதன் மூலம் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் கண்டுகளிக்கப்படுகின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்கதொரு நிகழ்ச்சியே தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் ஆகும். இதன் மூலம் நன்மை கிடைப்பதாக சில வாதங்கள் இடம் பெற்று வருகின்றபோதும் முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை இது அவர்களது இஸ்லாமிய வாழ்வியலுக்கே பாரிய சவாலாகக் காணப்படுகின்றது. இஸ்லாமிய குடும்பத்தை கட்டியெழுப்புவதில் பெண்களின் பங்கு இன்றியமையாததாகும். ஆனால் ஆய்வுப் பிரதேசத்தை பொறுத்தவரை முஸ்லிம் குடும்பத் தலைவிகள் குடும்பத்தை விட தொலைக்காட்சித் தொடர்களில் மூழ்கித் திளைப்பதனால் பல்வேறுபட்ட எதிர்மறைத் தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர். இத்தாக்கங்கள் எவை? என இனங்கண்டு, அவற்றை குறைப்பதற்கான ஆலோசனைகள் சிலவற்றை வழங்கி, தூய இஸ்லாமிய குடும்பத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் சமூகச் சீர்கேடுகளைத் தவிர்க்கும் ஒரு முயற்சியாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இதற்காக முதல்நிலை, இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

***திறவுச் சொற்கள்*** : *தொடர் நாடகங்கள், எதிர்மறை விளைவுகள், முஸ்லிம் பெண்கள், இஸ்லாமிய குடும்பம்*

**ஆய்வுப் பின்னணி**

ஊடகங்களின் வருகையினால் சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. இன்று தொலைபேசி, தொலைக்காட்சி, வானொலி, கணனி, சமூக வளைத்தளங்கள் என பல்வேறு வடிவங்களில் ஊடகம் மனித சமூகத்தை ஆட்கொண்டு வருகின்றது. இதனடிப்படையில் தெலைக்காட்சி குறித்து பேசுகின்ற போது இலங்கை மற்றும் தென்னிந்திய இயக்கத் திரைகளை நாம் குறிப்பிட முடியும். அதிலும் குறிப்பாக தென்னிந்திய திரைகள் இன்றைய ஊடகங்கள் வாயிலாக அனைத்து சமூகங்களிலும் ஆதிக்கம் செலுத்துவதனை மறுக்க முடியாதுள்ளது. இலங்கையை பொருத்தவரை தமிழ் அலைவரிசைகளான நேத்ரா, சக்தி, வசந்தம் என்பவற்றில் ஒளிபரப்பாகும் தென்னிந்திய தொலைக்காட்சித் தொடர் நாடகங்களை ஆய்வுப் பிரதேசத்தில் எவ்வித தடங்களுமின்றி காண முடிகின்றது. இச்சின்னத்திரை தொடர் நாடகங்கள் ஆய்வுப் பிரதேச மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்ததாகக் காணப்படுகின்றன. இன்று மக்கள் குடும்ப விவகாரங்களில் கவனம் செலுத்துவதை விட சின்னத்திரைக்காக திட்டமிட்ட அடிப்படையில் தங்களது செயற்பாடுகளை அமைத்துக் கொள்கின்றனர்.

சின்னத்திரை நாடகங்களின் காலம் நீண்டதாக இருப்பதனால் அதன் கருவோட்டம் மக்களின் குறிப்பாக பெண்களின் மனதில் ஆழப்பதிந்து விடுகிறது. சிந்தனையை ஒரு சேர கட்டி விட்டது போல் அவர்களின் எண்ணம் அதிலேயே உறைந்து விடுகிறது. இக்கலாசாரம் மக்களின் வாழ்வில் கலந்து விட்டது எவ்வாறு உண்மையோ, அவ்வாறே அது அவர்களின் ஒழுக்கத்தையும் சிதைத்து களங்கப்படுத்தி விட்டதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

தூய்மையான அத்திவாரத்தில் கட்டியெழுப்பப்படுவதே இஸ்லாமியக் குடும்ப அமைப்பாகும். இதனை விருத்தி செய்வதில் முக்கிய பங்கை பெண் பெற்றுக் கொள்கிறாள்.

இஸ்லாமிய குடும்ப அமைப்பில் வாழும் முஸ்லிம் பெண் கணவனுக்கு கட்டுப்பட்டு நடப்பதுடன் சிறந்த சமுதாய உருவாக்கத்திற்காக குழந்தைகளை நல்லொழுக்கமுள்ளவர்களாக வளர்ப்பவளாகவும் இருக்க வேண்டும். ஏனெனில் வீடே முதல் பயிற்சிக் கூடமாகும். இத்தகைய இஸ்லாமிய குடும்ப அமைப்பின் தாற்பரியங்களை சின்னத்திரைத் தொடர்கள் சிதைத்து விடுகின்றன. ஆய்வுப் பிரதேசத்தில் பெரும்பாலான முஸ்லிம் பெண்களது கால நேரம் சின்னத்திரை நாடகங்களிலேயே கழிகின்றது. இதற்காக இறை வணக்கத்தை கூட விரைவுபடுத்தக் கூடியவர்களாக அவர்கள் காணப்படுகின்றனர். தொலைக்காட்சிப் பெட்டியை கண்டிராத ஆரம்பகால முஸ்லிம் வீடுகளில் மாலை நேரங்களில் அல் குர்ஆன் ஓதும் சத்தம் தெருவெங்கும் கேட்பது வழக்கமாக இருந்தது. ஆனால் இன்று அது வழக்கொழிந்து அதற்குப் பதிலாக நாடகங்களில் வரும் கதாப்பாத்திரங்களின் சத்தமே ஊரெங்கும் எதிரொலிக்கிறது. இதனால் குடும்ப உறவுகளில் விரிசல்கள் இடம் பெறுவதுடன் ஒழுக்கவியல், ஆன்மீகம், இஸ்லாமிய கலாசாரத்தை பின்பற்றுதல் என்பவற்றில் இடர்பாடுகளை அவதானிக்க முடிகிறது.

இஸ்லாம் தமது பொறுப்புக்களில் பொடுபோக்காக இருப்பதையோ அல்லாஹ் அனுமதிக்காத ஒன்றை வாழ்வின் அம்சமாக பின்பற்றுவதையோ ஒரு போதும் விரும்புவதில்லை. ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்ட பொறுப்புக்களுக்கு அவரவர் மறுமையில் பதில் அளிக்க வேண்டும். இதில் பெண்களும் விதிவிலக்கானவர்களல்லர். ஆய்வுப் பிரதேசத்தில் சின்னத்திரைத் தொடர் நாடகங்களில் மூழ்கியுள்ள முஸ்லிம் பெண்கள் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். எனவே, அவர்கள் முகம் கொடுக்கும் எதிர் மறையான தாக்கங்களை இனம் காட்டுவதுடன் அவர்கள் அதிலிருந்து விடுபடுவதற்காகவும் சிறந்த குடும்பத்தை கட்டியெழுப்பி இஸ்லாமிய சமூகத்தை சீர்திருத்துவதற்காகவும் ஆலோசனைகளை வழங்குவது அவசியமாகும். இப்பின்னணியிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கங்கள்**

- தென்னிந்திய தொலைக்காட்சித் தொடர் நாடகங்களால் முஸ்லிம் பெண்களில் ஏற்படும் எதிர்மறைத் தாக்கங்களை இனங்காணல்
- ஆய்வுப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ள எதிர்மறைத் தாக்கங்களைக் குறைப்பதற்கான சில ஆலோசனைகளை வழங்குதல்.
- முஸ்லிம் பெண்களிடையே இஸ்லாமியக் குடும்ப அமைப்பை பேணுவதன் அவசியத்தை உணர்த்துதல்.

**ஆய்வு முறையியலும் தரவு சேகரிப்பும்**

கல்முனைக்குடி கிராம சேவகர் பிரிவானது 1 – 14 வரையான பகுதியை கொண்டதாகும். இதில் 1 – 5 வரையில் வாழும் 1883 குடும்பங்களே ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. இங்கு வாழும் முஸ்லிம் குடும்பங்களின் எண்ணிக்கைக்கேற்ப எளிய எழுமாற்று முறை மூலம் 15 : 1 என்ற விகிதத்தில் 120 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு, பூரணப்படுத்தப்பட்ட வினாக்கொத்து சேகரிக்கப்பட்டு Ms Excel மென் பொருள் மூலம் தரவுப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இதில் குடும்பத் தலைவிகள் மட்டுமே ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதன்படி 5 கிராம சேவகர் பிரிவிலும் வினாக்கொத்து வழங்கப்பட்ட விதத்தை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

**அட்டவணை: 01 ஆய்வுப் பிரதேசத்தில் தகவல் தருபவர்களது எண்ணிக்கையும் வீதமும்**

| கிராம சேவகர் பிரிவு | குடும்பங்களின் எண்ணிக்கை | வினாக்கொத்து வழங்கப்பட்ட எண்ணிக்கை | வினாக் கொத்து வழங்கப்பட்ட சதவீதம் |
|---|---|---|---|
| கல்முனைக் குடி 01 | 399 | 26 | **22%** |
| கல்முனைக் குடி 02 | 431 | 28 | **23%** |
| கல்முனைக் குடி 03 | 267 | 16 | **13%** |
| கல்முனைக் குடி 04 | 292 | 18 | **15%** |
| கல்முனைக் குடி 05 | 494 | 32 | **27%** |
| **மொத்தம்** | **1883** | **120** | **100%** |

மூலம்: பிரதேச செயலக அறிக்கை மற்றும் ஆய்வாளர்கள்

மேலும் பங்குபற்றல் அவதானம், ஊர் பெரியவர்கள், முக்கிய பிரமுகர்களுடனான நேர்காணல், கலந்துரையாடல் என்பவற்றின் மூலமும் தரவு சேகரிக்கப்பட்டது. அத்துடன் இவ்வாய்வில் இரண்டாம் நிலைத்தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள், பிரதேச செயலக அறிக்கை, ஏனைய ஊடகங்கள், முன்னைய ஆய்வுகள் என்பவற்றினூடாகவும் தரவுகள் பெறப்பட்டன. எனினும் இந்த ஆய்வில் முதல் நிலைத் தரவிற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.


கேபிள் தொலைக்காட்சி மூலம் தென்னிந்திய அலைவரிசைகளின் தாக்கம் இப்பகுதிகளில் காணப்படினும் பொருளாதார மட்டத்திலும், பிரதேச ரீதியிலும் அனைத்து மக்களாலும் இடையூறின்றி பார்க்க கூடியதான இலங்கை தமிழ்

அலைவரிசைகளான நேத்ரா, சக்தி, வசந்தம் என்பவற்றில் இரவு வேளைகளில் ஒளிபரப்பாகும் தமிழ் தொடர் நாடகங்களே ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் இரவு நேரத்தில் ஒளிபரப்பப்படும் தொடர் நாடகங்களான உறவுகள், அத்திப்பூக்கள், மாதவி, வாணி ராணி, சரவணன் மீனாட்சி, இதயம், செல்லமே போன்ற நாடகங்களே ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

**கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்**

ஆய்வுப் பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் பெண்களிடம் பெறப்பட்ட தகவலின் படி 113 பெண்கள் ஓய்வு நேரத்தில் தொலைக்காட்சி பார்ப்பதாகக் கூறுகின்றனர். இது வினாக்கொத்து வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் 94% மாக உள்ளது. 07 பேர் (06%) தொலைக்காட்சி பார்ப்பதில்லை எனக் குறிப்பிட்டனர். தொலைக்காட்சி பார்க்கும் 113 பேரில் நாடகத்தை விரும்பிப் பார்ப்பவர்கள் 97 பேராவர். இது தொலைக்காட்சி பார்ப்பவர்களில் 86% மாகக் காணப்படும் அதே நேரம் பெறப்பட்ட வினாக்கொத்தில் 81% மாகவும் காணப்படுகின்றது. மீதி 14% மானோர் நாடகம் பார்க்கவில்லை எனினும் தொலைக்காட்சியின் வேறு நிகழ்ச்சிகளை பார்ப்பதாக கூறுகின்றனர். ஆய்வில் நாடகங்கள் ஏற்படுத்தும் எதிர்மறைத் தாக்கங்கள் நாடகம் பார்க்கும் 97 பேரிலிருந்தே அளவிடப்பட்டது. இதன்படி இவ்வாய்வுப் பிரதேசத்தில் முஸ்லிம் பெண்கள் இரவு வேளைகளில் நாடகம் பார்ப்பதற்காகச் செலவிடும் காலப்பகுதியை பின்வரும் வரைபு காட்டுகின்றது.

**வரைபு : 01 : நாடகம் பார்ப்பதற்கு செலவு செய்யும் நேரம்**




மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2014

இரவு எனும்போது தூக்கம் தவிர ஏனைய நேரம் மிகச் சுருங்கியதாகும். இந்நேரத்தில் 1 தொடக்கம் 3 மணி வரை அல்லது அதற்கும் மேல் நேரத்தை நாடகத்துக்காக செலவிடுவதானது நேரத்தை வீணடிப்பதாகக் காணப்படுகின்றது. பெறப்பட்ட தகவலின் படி நாளாந்தம் 2 மணித்தியாலங்களுக்கு மேல் தொலைக்காட்சி நாடகங்களுக்காகச் செலவழிப்போர் 81 வீதத்தினராவர். பிரதேச மக்கள் வாழ்நாளில் அதிகமான பொழுதுகளை நாடகம் பார்ப்பதில் கழிக்கின்றனர். இதனை வாரம், மாதம், வருடம் என்ற ரீதியில் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

**அட்டவணை : 02 : வாரம், மாதம், வருட அடிப்படையில் நாடகம் பார்க்க செலவிடும் நேரம்**

| ஓர் இரவில் நாடகம் பார்க்க செலவிடும் நேரம் | இரவில் ஒரு வாரத்திற்கு செலவிடும் நேரம் | இரவில் ஒரு மாதத்திற்கு செலவிடும் நேரம் | இரவில் ஒரு வருடத்திற்கு செலவிடும் நேரம் |
|---|---|---|---|
| 1 மணித்தியாலம் | 7 மணித்தியாலம் | 30 மணித்தியாலம் | 365 மணித்தியாலம் |
| 1 மணி 30 நிமிடம் | 10 மணித்தியாலம் 30 நிமிடம் | 45 மணித்தியாலம் | 547 மணித்தியாலம் |
| 2 மணித்தியாலம் | 14 மணித்தியாலம் | 60 மணித்தியாலம் | 730 மணித்தியாலம் |
| 2 மணி 30 நிமிடம் | 17 மணித்தியாலம் | 75 மணித்தியாலம் | 912 மணித்தியாலம் |
| 3 மணித்தியாலம் | 21 மணித்தியாலம் | 180 மணித்தியாலம் | 1095 மணித்தியாலம் |
| 3 மணித்தியாலத்துக்கு மேல் | 21 மணித்தயாலத்துக்கு மேல் | 180 இற்கு மேல் | 1095 இற்கு மேல் |


மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2014

இவ்வட்டவணைப்படி நாடகத்துக்காக தினம் ஒரு மணித்தியாலம் செலவிடுவோர் ஒரு வருடத்தில் 365 மணித்தியாலங்களையும் (15 நாள் 21 நிமிடம்), 1 மணித்தியாலம் 30 நிமிடம் பார்ப்போர் ஒரு வருடத்தில் 547 மணித்தியாலங்கள் 30 நிமிடங்களையும் (22 நாள் 1 மணி 49 நிமிடங்களையும்), 2 மணித்தியாலம் பார்ப்போர் ஒரு வருடத்தில் 730 மணித்தியாலங்களையும் (30 நாள் 42 நிமிடங்கள்), 2 மணி 30 நிமிடம் பார்ப்போர் 912 மணித்தியாலங்களையும் (38 நாள்), 3 மணித்தியாலம் பார்ப்போர் ஒரு வருடத்தில் 1095 மணித்தியாலத்தையும் (45 நாள் 60 நிமிடம்) செலவிடுகின்றனர். இது இரவு வேளை மட்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதிலிருந்து ஆய்வுப் பிரதேச மக்கள் பல்லாயிரக்கணக்கான மணித்தியாலங்களை வீணடித்துள்ளமையை அறியலாம். இச்செயற்பாடுகள் முஸ்லிம் குடும்ப சமூக நலன் பேணும் செயற்பாடுகளை முற்றாக சிதைத்து விடுகிறது.

கல்வித்தகைமை அடிப்படையில் நோக்கும் போது கல்வி அறிவு குறைந்த பிரிவினரே அதிகம் நாடகம் பார்க்கின்றனர். அந்தவகையில் முறைசார் கல்வியை பெறாதோர் 17 பேரில் 94% மானோரும் ஆரம்பக்கல்வி பெற்றோர் 33 பேரில் 94% மானோரும் இடைநிலைக்கல்வி பெற்றோர் 43 பேரில் 93% மானோரும் நாடகம் பார்க்கின்றனர். குறைவாக நாடகம் பார்ப்பவர்களாக பல்கலைக்கழகக் கல்வி பெற்றோர் 12 பேரில் 33% மானோரும் தொழிற்தகைமை கல்வி பெற்றோர் 15 பேரில் 40 % மாகவும் காணப்படுகின்றனர். இதிலிருந்து கல்வியறிவு குறைந்த அறியாமையிலுள்ள முஸ்லிம் பெண்கள்

நாடகம் பார்ப்பதில் அதிக ஆர்வம் செலுத்துவதனை காணக் கூடியதாக உள்ளது.

**வரைபடம் : 02 : கல்வித்தகைமை அடிப்படையில் நாடகம் பார்ப்போர்**




மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2014

நாடகம் பார்க்கும் 97 பேரில் 87 பேருக்கு பிள்ளைகள் உள்ளனர். 10 பேருக்கு பிள்ளைகள் இல்லை. 87 பேரில் 78 பேர் தொடர் நாடகங்களைப் பார்ப்பதால் பிள்ளை பராமரிப்பில் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் 9 பேர் எத்தகைய சிரமத்தையும் எதிர்நோக்கவில்லை என்றும் கூறுகின்றனர். இங்கு நாடகம் பார்ப்போரின் பிள்ளைகளில் எதிர்மறைத் தாக்கம் ஏற்பட்டுள்ளது எனக் கூறுவோர் வீதம் 80 ஆகும். எதிர்மறைத் தாக்கம் இடம்பெற்றுள்ளது எனக் கூறும் 78 பேரில் தங்களது பிள்ளைகளது பாடசாலை விடயங்களில் கவனம் செலுத்த முடியாதுள்ளது என்போர் 86% மாகவும் கற்பிக்க நேரம் போதவில்லை என்று 62% மானோரும் பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான உணவு வழங்க முடிவதில்லை என்று 55% மானோரும் பிள்ளைகளின் சுத்தத்தை தங்களால் பேண முடிவதில்லை என்று 45% மானோரும் கூறியுள்ளனர். இதன் விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.


**அட்டவணை : 03 : பிள்ளைகளைப் பராமரிப்பதில் இடம்பெறும் எதிர்மறைத்தாக்கங்கள்**

| சிரமங்கள் | தெரிவு செய்த நபர்களின் எண்ணிக்கை | தெரிவு செய்த நபர்களின் வீதம் |
|---|---|---|
| கற்பிப்பதற்கு நேரம் போதாமை | 48 | 62% |
| பிள்ளையின் சுத்தம் பேண முடியாமை | 35 | 45% |
| ஆரோக்கிய உணவு வழங்க முடியாமை | 43 | 55% |
| பாடசாலை விடயங்களை கவனிக்க முடியாமை | 67 | 86% |

மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2014

பெரும்பாலான பெண்கள் பிள்ளைகளது பாடசாலை விடயங்களில் கவனம் செலுத்தாததுடன் அவர்களுக்கு கற்பிக்காதும் விடுகின்றனர். இதனால் வீட்டு வேலைகள் செய்யவில்லை என பாடசாலைக்கு செல்ல மறுத்தல், ஆசிரியர்களால் தண்டிக்கப்படல் போன்ற பிரச்சினைகளுக்கு அவர்கள் முகம் கொடுக்கின்றனர். அது மட்டுமன்றி, இரவில் பிள்ளைகள் கல்வி கற்கும் நேரங்களில் தாய்மார் நாடகம் பார்க்க அமர்வதால் பிள்ளைகளும் அதனைக் கண்டு களிக்கின்றனர். இதனால் அவர்களிலும் பல்வேறுபட்ட தாக்கங்கள் இடம் பெறுவதாக ஆய்வுப் பிரதேசத்தில் பிள்ளைகளை வளர்ப்பதில் சிரமத்தை எதிர்கொள்வதாக கூறும் அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். இதன்படி பிள்ளைகள் கல்வியில் ஈடுபாடற்று நடக்கின்றனர் என 87% மானோரும் கதாபாத்திரம் போல் பேசுதல், நடித்தல் என்பவற்றில் ஈடுபடுவதாக 82% மானோரும் நேரத்தை திட்டமிடுவதில் பிள்ளைகள் சிரமப்படுகின்றனர் என 75% மானோரும் சமய போதனைகளை உதாசீனம் செய்கின்றனர் என 74% மானோரும் ஆண் - பெண் உறவில் தாராளத்தன்மையாக நடக்கின்றனர் என 64% மானோரும் பிள்ளைகள் ஈமானில் பலவீனமாக உள்ளனர் என 59% மானோரும் கூறுகின்றனர். இதனை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது


**வரைபடம் : 03 : பிள்ளைகளது நடத்தையில் நாடகங்கள் ஏற்படுத்தும் எதிர்மறைத் தாக்கங்கள்**




மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2014

இன்று நாடகங்கள் பல பிள்ளைகளை பின்வருமாறு எதிரிடைத் தாக்கங்களுக்கு உட்படுத்துகின்றன. வளராத சிறுவர்கள் கூட காதலிப்பதாகவும் ஆண் பெண் வேறுபாடற்ற நெருக்கமான உறவுகளை அனுமதிப்பதாகவும் நாடகங்களில் சித்தரிக்கப்படுகின்றன. பாடசாலை விட்டு வந்த சிறார்கள் மேலதிக வகுப்புக்குச் செல்லுவதும் வீட்டுக்கு வந்து நாடகம் பார்த்து விட்டு உறங்குவதுமாக பொழுது போய் விடுகிறது. ஆசிரியர்கள் கொடுக்கும் வீட்டு வேலைகளை செய்யக்கூட அவர்களால் முடிவதில்லை. இது முஸ்லிம் மாணவர்கள் எதிர்நோக்கும் பாரிய சவாலாக காணப்படுவதாக நேர்காணலுக்குட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் கூறுகின்றனர். பெற்றோரது ஆசிரியர்களது கருத்துக்களை அலட்சியப்படுத்துபவர்களாகவும் அவர்கள் காணப்படுகின்றனர்.

**வரைபடம் : 04 : கணவனது கடமைகளை நிறைவேற்றுவதில் இடம்பெறும் எதிர்மறைத்தாக்கங்கள்**




மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2014

ஆய்வுப் பிரதேசத்தில் பெண்கள் தொடர் நாடகங்களைப் பார்ப்பது கணவன் - மனைவி உறவில் விரிசல்களை ஏற்படுத்துகின்றதா? எனப்பார்ப்பதற்காக எடுக்கப்பட்ட புள்ளிவிபரத்தின்படி, கணவனது முன்னேற்றத்தில் பங்குபற்ற முடியாதுள்ளதாக 46% மானோர் கூறுகின்றனர். வீட்டில் தன்னை அலங்கரித்துக் கொள்ள நேரம் கிடைப்பதில்லை என 62% மானோரும் கணவனின் பேச்சுக்கு செவிசாய்க்க முடிவதில்லை என 64% மானோரும் கணவருடன் அமைதியாக உரையாட நேரம் கிடைப்பதில்லை என 64% மானோரும் தமது வீட்டை சரியான முறையில் பராமரிக்க முடிவதில்லை என 60% மானோரும் கூறுகின்றனர். இவை கணவன் - மனைவி உறவில் விரிசல் ஏற்பட்டு அது விவாகரத்தில் முடிந்து விடுவதற்கு காரணங்களாக அமைந்து விடுகின்றன. மேலும் தாய், தந்தையரின் இந்நடத்தைக் கோலங்கள் பிள்ளைகளது நடத்தையிலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி விடுகிறன.

முஸ்லிம் பெண்கள் நாடகத்தில் செலுத்தும் ஆர்வமானது குடும்ப உறவுகளை தூரப்படுத்துவதனை ஆய்வினூடாக அறிய முடிகிறது. நாடகம் ஒளிபரப்பப்படும் நேரங்களில் வீட்டை விட்டு வெளியே செல்வதையோ வீட்டுக்கு விருந்தினர் வருவதையோ அவர்கள் விரும்பாதுள்ளனர். இதனால் இஸ்லாம் கூறும் உறவினர்களுடன் உறவு பேணுதல், நோய் விசாரிக்கச் செல்லல், பிற மனிதர்களுக்கு உதவுதல் போன்ற இபாதாக்களை புறக்கணிக்கின்றனர். உறவினர் வீட்டுக்குச் செல்வது பற்றி ஆராயப்பட்டபோது 12 வீதமானோர் அடிக்கடி செல்வதாகவும், 24 வீதமானோர் வாரம் ஒரு முறையும் 38 வீதமானோர் மாதம் ஒரு முறையும் செல்கின்றனர். 26 வீதமானோர் உறவினர் வீட்டுக்கு போக நேரம் போதவில்லை என்றும் கூறியுள்ளனர். அது போல் நாடகம் பார்க்கும்வேளை உறவினர் வீட்டுக்கு வருவதை விரும்பாதோர் 69 வீதமாக காணப்படுகின்றனர். உறவினர் வந்து அமர்ந்திருக்க அவரது முகத்தை கூடப் பார்க்காமல் நாடகத்திலேயே இலயித்துப் போனவர்களும் உண்டு.

நாடகங்களால் ஏற்படும் கலாசாரத் தாக்கங்களைப் பொறுத்தவரை இதனை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். இந்தவகையில் நாடகத்தில் அணியும் ஆடை, ஆபரணங்கள், பிரயோகிக்கும் வசனங்கள் என்பவை பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. நாடகத்தில் ஒரு தொடர் தவறவிட்டால் அதை மற்றவர்களிடம் கேட்டு அறிதல், மின் துண்டிப்பு அல்லது வேறு காரணங்களால் நாடகம் தவறவிடப்பட்டால் அதனைப் பெரிய இழப்பாக கருதுதல் போன்ற பண்புகள் கொண்டவர்களாக முஸ்லிம் பெண்கள் காணப்படுகின்றனர். உணவு உண்ணும் போது நாடகம் பார்த்துக் கொண்டே உண்ணுவதால் அனைவரும் சேர்ந்து உண்ணவோ, உணவு உண்பதில் இஸ்லாமிய விழுமியங்கள் பேணுவதோ முடியாதுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் முஸ்லிம் பெண்களில் இத்தகைய தாக்கங்களின் அளவீட்டை கீழ்வரும் அட்டவணை காட்டுகின்றது

**அட்டவணை : 04 : நாடகங்கள் கலாசாரத்தில் ஏற்படுத்தும் எதிர்மறைத் தாக்கங்கள்**


| கலாசார தாக்கங்கள் | எண்ணிக்கையும் வீதமும் |
|---|---|
| நாடகத்தில் வருவது போல் ஆடை அணிய விரும்புகிறேன். | (84 )99% |
| நாடகத்தில் வருவது போல் அணிகலன் அணிய விரும்புகிறேன். | (84)99% |
| வசனங்களை அடிக்கடி உபயோகிக்கின்றேன். | (62) 73% |
| நாடகத் தொடர் ஒன்று விடுபட்டால் மற்றவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன். | (81)95% |
| தொடர் ஒன்று விடுபட்டால் ஒன்றை இழந்ததாகக் கருதுகிறேன். | (80)94% |
| உரிய நேரத்தில் உணவு சமைக்க முடியாமை. | (49) 58% |
| சுவையாக உணவு வழங்க முடிவதில்லை. | (29)35% |
| ஒரே நேரத்தில் குடும்பத்தவர் அனைவரும் உண்ண முடிவதில்லை. | (76)90% |
| நாடகம் பார்த்துக் கொண்டே உணவு உண்ணுகிறேன். | (58)69% |

மூலம் : வினாக் கொத்து அளவை ஆய்வு 2014

முஸ்லிம் பெண்களின் ஆன்மீக, சமய நடவடிக்கைகளிலும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. ஐவேளை தொழுகையை நிறைவேற்றுவதுகூட அவர்களால் சிரமமாக உள்ளது. மேலும் நாடகம் பார்ப்பதற்காக அவசர அவசரமாக தொழுகையை நிறைவேற்றிவிட்டு வந்து தொலைக்காட்சியின் முன் அமர்தல், தொழுகையை மறந்து தொலைக்காட்சி பார்த்தல் என்பனவும் இடம்பெறுகிறது. எனினும் ஆய்வுப் பிரதேசத்தை பொறுத்தவரை சமயரீதியான தாக்கத்தை அளவிடுவதில் சற்று சிரமத்தை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஏனெனில் இது பற்றிய உண்மை நிலையை வெளிப்படுத்த அவர்கள் விரும்பவில்லை. எனினும் கிடைத்த தகவல்களை பின்வரும் அட்டவணை காட்டி நிற்கிறது. 63% மானோர் மார்க்க விடயங்கள் பேசப்படும் போது உள்ளச்சம் இடம் பெறுவதில்லை என

கூறுகின்றனர். இதுவே ஆகக்கூடிய தெரிவாகும். அவர்களது ஏனைய தெரிவுகளை பின்வரும் வரைபடம் குறித்துக் காட்டுகின்றது.
நாடகங்களில் காண்பிக்கப்படும் இணைவைத்தல் செயற்பாடுகள், மூடநம்பிக்கைகள் என்பவற்றை முஸ்லிம் பெண்கள் நம்புவதோடு அதனை நிறைவேற்றியும் வருவதனை அவதானிக்க முடிகிறது. அந்த வகையில் இஸ்லாத்துக்கு முரணாக காண்பிக்கப்படும் கொள்கை 24 வீதமாக உள்ளது. முன்னைய காலங்களுடன் ஒப்பிடும்போது இன்றைய பெண்களுக்கு அல் குர்ஆன் ஓதுவதற்குக்கூட நேரம் ஒதுக்க முடியாதுள்ளதனை நேர்காணலினூடாக அறிய முடிந்தது.

**வரைபடம் : 05 : நாடகங்கள் சமய ரீதியாக ஏற்படுத்தும் எதிர்மறைத் தாக்கங்கள்**




மூலம் : வினாக் கொத்து அளவை ஆய்வு 2014

தென்னிந்தியத் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் முஸ்லிம் பெண்களிடத்தில் ஏற்படுத்தும் எதிர்மறை தாக்கங்களை மேற்கண்டவாறு வினாக்கொத்து, அவதானம், நேர்காணல் என்பவற்றினூடாக இனம் காண முடிகின்றது.

**கண்டறிந்தவை**

01. முஸ்லிம் பெண்கள் நாடகம் பார்ப்பதால் பெறுமதி மிக்க நேரம் வீணடிக்கப்படுவதுடன் குடும்ப சமூக நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றன.

02. முஸ்லிம் பெண்கள் நாடகம் பார்ப்பதனால் சமய ரீதியான எதிர்மறைத் தாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. அவர்கள் மார்க்க கடமைகளை நிறைவேற்றுவதில் பின்தங்கியுள்ளதுடன் குறிப்பிட்ட சில வணக்க வழிபாடுகளுடன் மட்டும் நின்று விடுகின்றனர். இஸ்லாத்துக்கு முரணான கொள்கைகளிலும் வீழ்ந்து விடும் அபாயம் காணப்படுகின்றது.

03. முஸ்லிம் பெண்கள் பிள்ளைகளை பராமரிப்பதில் பெரும் சவால்களை எதிர்கொள்கின்றனர். நாடகம் பார்ப்பதில் நேரத்தைக் கழிப்பதால் பிள்ளைகளது ஒழுக்கம், ஆன்மீகம், கல்வி என்பவற்றில் கவனம் செலுத்துவதில் தவறிழைத்து பிள்ளைகளது எதிர்காலமே கேள்விக்குறியாகுமளவிற்கு செயற்படுகின்றனர்.

04. கணவனுக்கு செய்ய வேண்டிய கடமைகளை மறந்த நிலையில் காணப்படுகின்றனர். இதனால் உறவில் விரிசலும் மன அழுத்தம், விரக்தி போன்ற நிலைகள் இரு சாராரிலும் இடம் பெறுகின்றன.

05. பெண்களின் நாடகங்கள் மீதான விருப்பம், குடும்ப உறவினர்கள், விருந்தினரை உபசரித்தல் என்பவற்றில் அக்கரையின்மையை ஏற்படுத்துகின்றது.

06. கலாசார, ஒழுக்க சீரழிவுகள் இடம் பெறுகின்றன. உணவு உண்ணல் போன்ற இபாதத்தான விடயங்களை நாடகத் தொடர் பார்த்துக் கொண்டே உண்ணல், பிற மத கலாசார ஆடை அணிகலன்களை அணிய விரும்புதல், தமது நடை, உடை, பாவனைகளில் இஸ்லாத்துக்கு முரணான தன்மைகளை வெளிக்காட்டுதல் என்பன இடம் பெறுகின்றன.

07. குடும்பத்தின் பரஸ்பர கடமைகளை நிறைவேற்றுவதில் பாராமுகம் காட்டல்.

08. நாடகம் பார்ப்பது தவறான வழிக்கு இட்டுச் செல்லும் என்று தெரிந்தும் பார்க்கப்படுகிறது.

**ஆலோசனைகள்**

01. இயக்கங்கள் (த.ஃவா அமைப்புக்கள்), மஸ்ஜித் அது சார்ந்த நிர்வாகம் அதன் சமூக பணிகளை விரிவுபடுத்தி பெண்களுக்கு ஆலோசனை வழங்குவதோடு வெள்ளிக்கிழமைகளில் இடம்பெறும் குத்பா பிரசங்கங்கள் பெண்கள் தொடர்பான விடயங்கள், பெண்கள் சார் பணிகளின் தேவைகள் குறித்தும் நிகழ்த்தப்பட வேண்டும்.

02. இப்பிரதேசத்தில் உள்ள பெண் ஆலிமாக்கள் பெண்களுக்கான ‘தர்பியா’ வகுப்புக்கள், பெண்களுக்கான ‘பயான்’ நிகழ்ச்சிகளை மேற்கொண்டு அவர்களது கவனத்தை நாடகம் பார்ப்பதை விட்டும் திசை திருப்புதல் வேண்டும்.

03. எதிர்காலத்தில் குடும்பத்தை உருவாக்கப் போகின்றவர்கள் என்ற ரீதியில் பாடசாலை மட்டத்திலேயே முஸ்லிம் சிறுமிகளுக்கு ஈருலக வெற்றிக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளத் தூண்டி, விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

04. தாய்மார் பிள்ளைகளை நாடகம் பார்க்கவென இணைத்துக் கொள்வது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியதாகும். பிள்ளைகள் கற்கும் நேரத்தில் தொலைக்காட்சியை நிறுத்தி விடுவது அவசியம்.

05. குடும்ப உறவுகளுடன் அண்டி வாழ்தல், கலந்துரையாடுதல், ஆலோசனை வழங்கல், உறவை பலப்படுத்தும் நடவடிக்கைகள் என்பவற்றை மேற்கொள்ள வேண்டும்.

06. ஊடகங்கள் நேரத்தை வீணடிக்கும் விடயங்களைத் தவிர்த்து, பிரயோசனமான நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப வேண்டும்.

07. முஸ்லிம்களுக்கென்று தொலைக்காட்சி அலைவரிசைகள் உருவாக்கப்படுவது வரவேற்கத்தக்கது.

08. பெண்கள் மார்க்க அறிவு பெறுவதன் அவசியம், முக்கியத்துவம் குறித்து குடும்பத்தில் உள்ள ஆண்கள் பெண்களுக்கு வலியுறுத்தல் வேண்டும்.

09. பெண்கள் நாடகம் போன்ற வீணான விடயங்களில் ஈடுபடுவதற்குப் பதிலாக தமது நேரங்களை பயன்தரும் விடயங்களை கற்றுக் கொள்வதற்காக செலவிட வேண்டும்.

10. நபிலான வணக்கங்களை தானும் செய்து பிறருக்கும் வழி காட்ட வேண்டும்.

11. நாடகங்கள் ஏற்படுத்தும் பாரதூரமான விளைவுகளை அடையாளம் காட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தல் வேண்டும்.

**முடிவுரை**

தொடர்பூடகங்கள் அதிகமாக உலா வருகின்ற ஒரு பிரதேசமாக ஆய்வுப் பிரதேசம் காணப்படுவதனால் அவற்றுள் ஒன்றான தொலைக்காட்சித் தொடர் நாடகத்தால் முஸ்லிம் பெண்களிடம் இடம்பெற்றுள்ள எதிர்மறைத் தாக்கத்தை கண்டறியும் நோக்கில் இவ்வாய்வு இடம் பெற்றது. தென்னிந்திய தொலைக்காட்சி நாடகங்கள் முஸ்லிம் பெண்கள் மத்தியில் பாரிய எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதனையும் அவை அவர்களது குடும்ப வாழ்வை பாதித்துள்ளதனையும் ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன. முஸ்லிம் பெண்கள் மட்டத்தில் விழிப்புணர்வூட்ட வேண்டியதும், எதிர்மறைத் தாக்கங்களை களைவதும் சமூகத்தின் தேவைப்பாடாகும். இத்தாக்கங்களிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கும் தூய்மையான இஸ்லாமிய குடும்பத்தை கட்டி எழுப்புவதற்கும் மேலே குறிப்பிட்ட ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இப்பிரதேசப் பெண்கள் மத்தியில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

**நேர்காணப்பட்டோர்**

1) அப்துல் சமட், (2014.10.02). ஆசிரியர். அல் பஹ்ரியா மகா வித்தியாலயம். கல்முனை.
2) சக்கினா, எம். எப். (2014.10.03). ஓய்வு பெற்ற ஆசிரியை. கல்முனை.
3) சுபைதா, ஏ. (2014.10.02). குடும்பத் தலைவி. கல்முனை.
4) பவாஸ், டி. எல். (2014.10.02). பாடசாலை மாணவன். கல்முனை.
5) பாயிஸா, (2014.10.01). முகாமைத்துவ உதவியாளர். பிரதேச செயலகம்.
6) மன்சூர், யூ. எல். (2014.09.29). பிரதி அதிபர். கல்முனை.
7) றஹீம், எம். (2014.10.02). ஓய்வு பெற்ற அதிபர். கல்முனை.
8) நவாஸ், எஸ். எம். (2014.09.28). ஆசிரியர். அல்பஹ்ரியா மகா வித்தியாலயம். கல்முனை.
9) ஜெஸ்மியா, ஐ. (2014.10.01). ஆசிரியை. கல்முனை.
10) ஜோகராஜா, (2014.10.01). பொலிஸ். பெண்கள் சிறுவர் பொறுப்பதிகாரி. கல்முனை.

**உசாத்துணை : நூல்கள், சஞ்சிகைகள்**


1) Wilber Shamer, ***The effects of television on children and adolescents***. Stanford University (USA): Institute for Communication Research.
2) அபிராமி, க. (2001). ***தகவல் தொழிநுட்பம்.*** சென்னை : தமிழ் புத்தக நிலையம்.
3) அருணா செல்லத்துரை, (1997). ***இலங்கையில் தொலைக்காட்சி.*** கொழும்பு : அருணா வெளியீட்டகம்.
4) இராமசாமி, மு. (1998). ***தமிழ் நாடகம் நேற்று இன்று நாளை.*** நவரங்கபுர. ருத்ரா பதிப்பகம்.
5) ரவிந்திர சந்திரலால், சுகந்தி மணிமாறன், (2007). ***இலங்கையின் பொது மக்கள் சேவை ஊடகத்தை நோக்கி.*** கொழும்பு : மாற்றுக் கொள்கை நிலையம்.
6) வஸீரா ஹஸன், (2005, மே). தொலைக்காட்சி பார்த்தல் ஒரு சமூகப்பார்வை. ***அல்ஹஸனாத்.*** (பப: 16 – 18). தேமட்டகொட வீதி : இலங்கை ஜமஅதே இஸ்லாமி.


**இணையத்தளங்கள்**


1) Abu Mohamed Abdur – Rauf Shakir, ***The Effects effects of Televition*** [on line]. Available:http://www.missionislam.com/family/ill_effects_of_television.htm. [Accesed]: [2014. 10.02].
2) Valampury, (15.07.2014). ***தொடர் நாடகத் தொல்லை அறுக்க துணைபுரிவார் யாரோ*** [on line]. Available: http://www.valampurii.lk/valampurii/content.php?id=2464&ctype=news . [Accesed]: [2014. 10.02].
3) tv-actors.blogspot agency, (25.04.2011). ***Disadvandages of Maga Serial in TV*** [on line]. Available: http://tv-actors.blogspot.com/2011/04/disadvantages-of-mega-serial-in-tv.html. [Accesed]:[2014. 09.30].
4) ஈழநாதம், (10.02.2006). ***தமிழ் சமூகத்தில் தொலைக்காட்சி நாடகங்களின் தாக்கம்*** [on line]. Available: http://www.yarl.com/forum3/index.php?/topic/9485. [Accesed]: [2014. 10.02].
5) நல்லூர் முரசு, (07.01.2010). ***சீரழிக்கும் சின்னத்திரை நாடகங்கள்*** [on line]. Available: http://nallurmurasu.blogspot.com/2010/01/blog-post_07.html. [Accesed]:[2014. 10.02]